**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 13/2022**

PW1 – திரு.கார்த்திக் நாள். 20.08.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 3ம் பிரதிவாதி யார் என்றால் எனது தகப்பனாரின் முதல் மனைவியின் மகள் ஆவார். 3ம் பிரதிவாதியின் தாயார் தான் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு 4ம் பிரதிவாதி மட்டுமே மனைவி என்றும் 4ம் பிரதிவாதியை முதல் மனைவி என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 3ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் 4ம் பிரதிவாதி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் என்னவென்றால் செல்வி. முத்துலிங்கம் என்பவருக்கும் எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் எளிமையாக கோவிலில் திருமணம் நடைபெற்றதால் ஆவணங்கள் இல்லை.

2. முத்துலிங்கம் என்பவருக்கும் எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கும் எங்கு திருமணம் நடைபெற்றது என்பதை பற்றி எனது பிராதில் சொல்லியுள்ளனோ என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை நான் பிராதில்

சொல்லவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகள் எந்தெந்த தேதியில் பிறந்தார்கள் என குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். முத்துலிங்கம் பெயரில் எந்தெந்த ஊரில் சொத்துக்கள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் கிளியூரில் உள்ளது. முத்துலிங்கம் பெயரில் கிளியூரை தவிர வேறு எந்த ஊரிலும் அவருக்கு சொத்து இல்லை என்றால் சரிதான், கிளியூரில் உள்ள சொத்துக்களும் எனது தாய் மற்றும் தந்தை முத்துலிங்கம் பெயரில் இருந்து வருகிறது. 3ம் பிரதிவாதியை எப்போது எங்கு வைத்து பார்த்தேன் என்றால் திருவாடானை சாலையில் வைத்து பார்த்துள்ளேன், சுமார் நான்கு வருடங்களுக்கு முன் பார்த்தேன். 3, 4 பிரதிவாதிகளை பற்றி எனது தகப்பனார் முத்துலிங்கம் என்னிடம் ஏதேனும் சொல்லியுள்ளரா என்றால் சொல்லியுள்ளார். 3ம் பிரதிவாதியிடம் நான் நேரடியாக பேசியுள்ளேனா என்றால் பேசவில்லை. 4ம் பிரதிவாதியை எப்போது எங்கு வைத்து பார்த்தேன் என்றால் நீதிமன்றத்திற்கு வரும் போது பார்த்தேன். 3, 4 பிரதிவாதிகளை நான் பார்த்து பேசியதில்லை என்றும், அவ்வாறிருக்க எதன் அடிப்படையில் 3, 4 பிரதிவாதிகளின் விலாசத்தை அறிந்து அவர்கள் மீது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தை சொல்லியுள்ளார். இவ்வழக்கு முத்துலிங்கம் இறந்த பிறகு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், எனது தந்தை உயிருடன் இருக்கும் போதே விலாசம் பற்றி சொல்லியுள்ளார். முத்துலிங்கம் இறப்பிற்கு 3, 4 பிரதிவாதிகள் கலந்து கொண்டார்களா என்றால் கலந்து கொள்ளவில்லை. முத்துலிங்கம் இறப்பிற்கு 3, 4 பிரதிவாதிகள் கலந்து கொண்டார்கள் என்றும் கலந்து கொள்ளவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். முத்துலிங்கத்திற்கும்

1ம் வாதிக்கும் எப்போது எங்கு திருமணம் நடைபெற்றது என்ற விவரத்தை குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துலிங்கம் உயிருடன் இருக்கும் போது 4ம் பிரதிவாதியுடன் விவாகரத்து நடைபெற்றதற்கு ஆவணங்கள் ஏதேனும் கொடுத்துள்ளரா என்றால் கொடுத்துள்ளார். மேற்படி விவாகரத்து நடைபெற்றதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 12.08.2020 ம் தேதி முத்துலிங்கம் இறந்ததாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 11.11.2020 அன்று நகல் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். முத்துலிங்கம் 4ம் பிரதிவாதியுடன் விவாகரத்து நடைபெற்றதற்கு ஆவணங்கள் என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் கொடுத்துள்ளதாகவும் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை